DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No: 37/2022 Deposition of Witness for : P.W.20**

| | | | |
|---|---|---|---|
| Name | : **மணிகண்டன்** | Caste | |
| Father's Name | : **நடராஜன்** | Calling | |
| Age | : | Taluk | |
| Village | : | District | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 17.03.2025

**முதல் விசாரணை**

**1.** நான் தற்போது ஈரோடு நகர காவல் நிலையத்தில் குற்றப்பிரிவு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்புதாராபுரம் காவல் நிலையத்தில் வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது அலங்கியம் காவல் நிலைய குற்ற எண் 604/2021 வழக்கில் பொறுப்பு காவல் ஆய்வாளர் செல்வம் அவர்கள் முதல் விசாரணை செய்து என்னிடம் ஒப்படைத்ததை தொடர் புலன் விசாரணைக்காக ஏற்று கொண்டேன். 19.10.2021 ஆம் தேதி கோவை அரசு மருத்துவமனையில் இருந்து உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்த இந்த வழக்கின் காயம் பட்ட சுப்பிரமணி என்கிற பாலசுப்பிரமணியம் இறந்துவிட்டதாக கிடைத்த தகவல் குறிப்பாணையை பெற்று சட்டப்பிரிவுகளை 294 (b), 307 இதசவில் இருந்து 294 (b), 302 ஆக சட்டமாறுதல் செய்து அறிக்கை தயார் செய்தேன். **மேற்படி அறிக்கை அ.சா.ஆ.20**.

**2.** பின்னிட்டு அன்றைய தினம் 11:45 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டேன் மேற்படி சம்பவ இடத்தை ஏற்கனவே காவல் ஆய்வாளர் செல்வம் சாட்சிகள் முன்பு பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். மேற்படி ஆவணம் சம்பவ இடத்துடன் ஒத்துப்போனதால் நான் புதிதாக மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்யவில்லை.

பின்னிட்டு கோயம்புத்தூர் அரசு மருத்துவமனை சென்று அங்கு சவக்கடங்கில் இருந்த இறந்து போன சுப்பிரமணி என்கிற பாலசுப்பிரமணியம் என்பவரது பிரேதத்தை பஞ்சாயத்தாரர்கள் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பார்வையிட்டு பிரேத விசாரணை அறிக்கையை தயார் செய்தேன் மேற்படி **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.21.** பின்னிட்டு மேற்படி பிரேதத்தை சடல கூறாய்வுக்காக காவலர் அய்யனார் என்பவர் மூலம் மருத்துவர் வசம் வேண்டுகோள் கடிதத்துடன் அனுப்பி வைத்தேன்.

**3.** பிரேத விசாரணையின் போது சாட்சியாக இருந்த மீனாட்சி, ரவிக்குமார், விசாலாட்சி, மாயவன் மற்றும் ரமேஷ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சடலக்கூறாய்வு முடிந்து இறந்தவரின் பிரேதத்தை அவரது மனைவி விசாலாட்சி என்பவரிடம் காவலர் மூலம் ஒப்படைத்தேன். இவ்வழக்கின் எதிரிகளை தேடி வந்த சூழ்நிலையில் கடந்த 19 /10/ 2021 ஆம் தேதி 18. 15 மணிக்கு திருமலை பாளையம் விவேகம் பள்ளி அருகில் பேருந்து நிறுத்தம் அருகில் நின்று கொண்டிருந்த எதிரிகள் சந்துரு, சதீஷ் மற்றும் இளஞ்சிரார் கவின்குமார் ஆகியோர்களை தகவலாளி அடையாளம் காட்ட பிடித்து விசாரணை செய்தேன். 18.30 மணிக்கு எதிரிகள் சந்துரு மற்றும் சதீஷ் ஆகியோரை கைது செய்தேன்.

**4.** பின்னிட்டு நான் சாதாரண உடைக்கு மாறி இளைஞர் கவின்குமாரை கையகப்படுத்தினேன். பின்னிட்டு தகவல் கொடுத்து வரச் சொல்லி சம்பவ இடத்திற்கு வந்த சாட்சிகள் நந்தகோபால் மற்றும் மாயவன் ஆகியோர் முன்னிலையில் சந்துரு என்பவரை 18.45 மணிக்கு விசாரித்த போது அவர் எந்த விதமான அச்சுறுத்தலும், ஆசை வார்த்தைகளும் இன்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அதனைத் தொடர்ந்து சதீஷ் மற்றும் இளஞ்சிறார் கவின்குமார் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னிட்டு அவர்களை சம்பவ இடம் அழைத்துச் சென்று எதிரிகள் சம்பவ இடத்தை அடையாளம் காட்டினார்.

**5.** அன்றைய தினம் 20.47 மணிக்கு எதிரி சந்துரு சிக்கனாபுரம் தண்ணீர் பந்தலில் உள்ள அவரது பெரியப்பா முருகன் வீட்டின் பின்புறமாக இருக்கும் ஆட்டுச் சாலையில் மறைத்து வைத்திருந்த இந்த வழக்கு சம்பவத்தின் போது அணிந்திருந்ததாக கூறப்படும் ரத்தக்கரை படிந்த கருப்பு மற்றும் சிவப்பு வெள்ளை கோடு போட்ட முழுக்கை சட்டையை ஆஜர்ப்படுத்த அதை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மூலம் கைப்பற்றினேன். பின்னர் 21. 45 மணிக்கு எதிரிகள் மற்றும் இளஞ்சிறாருடன் அலங்கியம் காவல் நிலையத்திற்கு வந்தேன் அவர்களை திரேக பரிசோதனை செய்து பாராவசம் ஒப்படைத்துவிட்டு, இளஞ்சிறாரை சாதாரண உடைந்த காவலர் பாதுகாப்பில் வைத்தேன். எதிரிகள் மற்றும் இளஞ்சிறாரின் உறவினர்களுக்கு கைது குறித்து தகவல் தெரிவிக்கப்பட்டது.

**6.** பிரேத விசாரணை முடித்து காவலர் அய்யனார் பிரேதத்தில் இருந்து கைப்பற்றிய சிவப்பு கரை கொண்ட வெள்ளை நிற வேட்டியை படிவம் 91ல் கைப்பற்றினேன். பின்னிட்டு ஒப்புதல் வாக்குமூலத்திலும் கைப்பற்றுதல் மகஜரிலும் சாட்சியாக கையெழுத்து செய்த அலங்கியம் கிராம நிர்வாக அலுவலர் நந்தகோபால் மற்றும் மாயவன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னிட்டு எதிரிகள் சந்துரு மற்றும் சதீஷ் ஆகியோரை நீதிமன்ற காவலுக்கும் இளஞ்சிறார் கவின்குமாரை இளஞ்சிறார் குழுமத்திற்கும் அனுப்பிவைத்தேன். 20.10.2021 ஆம் தேதி இவ்வழக்கில் கொலையுண்டு இறந்துபோன பாலசுப்ரமணியம் என்பவர் மீதான சடலக்கூறாய்வில் சேகரம் செய்து வைக்கப்பட்டிருந்த உடல் உள் உறுப்புகளை காவலர் அய்யனார் என்பவர் மூலம் தடைய அறிவியல் ஆய்வகத்திற்கு நீதிமன்றத்தின் மூலம் அனுப்பி வைத்தேன்.

**7.** 25.10.2021 ஆம் தேதி தாராபுரம் அரசு மருத்துவமனையில் இறந்து போனவரை சிகிச்சைக்கு சேர்த்த சாட்சி குமரேசன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு இந்த வழக்கின் வாதி மீனாட்சியின் கணவர் அவரது மகள் சந்தியா, ஷாலினி மற்றும் சதீஷ்குமார் ஆகியோர்களை

விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்தேன். 28.10.2021 ஆம் தேதி சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளான கவின் குமார மாயவன் ரமேஷ் ஆகியோர்களை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். 12.11.2021 ஆம் தேதி எதிரி புவனேஷ் இடமிருந்து கைப்பற்றப்பட்ட கத்தி, எதிரி சந்துரு என்பவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட ரத்தக்கரை படிந்த முழுக்கை சட்டை மற்றும் இறந்து போனவர் பிரேதத்தின் மீது காணப்பட்ட வெள்ளை நிற வேட்டி ஆகியவற்றை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் மூலம் தடய அறிவியல் ஆய்வகத்திற்கு ஆய்வுக்காக அனுப்பி வைத்தேன்.

**8.** 16.11.2021 ஆம் தேதி இவ்வழக்கில் இறந்து போனவரின் ரத்தக்கரை படிந்த சட்டையும் பிரேத பரிசோதனை என்பது சேகரிக்கப்பட்ட ரத்த மாதிரியையும் கோவை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்குஆய்வுக்காக அனுப்பி வைத்தேன். பின்னிட்டு 26.11.2021 ஆம் தேதி எதிரி சந்துரு என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட சட்டையை தடைய அறிவியல் ஆய்வகத்திற்கு ஆய்வுக்காக நீதிமன்றம் மூலம் அனுப்பி வைத்தேன். 02.12.2021 ஆம் தேதி இறந்து போனவர் தாராபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போது அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்த மருத்துவர் திரு.ஹரீஷ்பிரபு என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

**9.** பின்பு இறந்து போனவரின் இறப்பை காவல் நிலையத்திற்கு தெரிவித்த மருத்துவர் சந்திரமோகன் என்பவரையும் இறந்து போனவரின் பிரேதத்தை சடலக்கூறாய்வு செய்த மருத்துவர் திரு பேரானந்தம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். தாராபுரம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்ற தலைமை எழுத்தர் திரு வெங்கடேசன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். காவலர் மோனிகா, நவநீதன், அய்யனார் என்பவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவிஆய்வாளர் சிவசுப்பிரமணியன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

**10.** 6.12.2021–ம் தேதி இந்த வழக்கின் சட்டப்பிரிவுகளை இதச பிரிவுகள் 294 பி 302 இல் இருந்து 294 பி, 341 342, 302 உ/இ 34 IPC மற்றும் 83 (2) Juvenile Justice Act 2015 இன் படி சட்ட மாறுதல் செய்து அறிக்கை தயார் செய்தேன். **மேற்படி மாறுதல் அறிக்கை அ.சா.ஆ–22.** பின்னிட்டு என்னுடைய புலன் விசாரணையை முடித்து ஆஜர் எதிரிகள் மீது அதே தேதியில் 294 பி, 341 342, 302 உ/இ 34 IPC மற்றும் 83 (2) Juvenile Justice Act படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** இறந்து போன சுப்ரமணியம் 16.10.2021 தேதி மாலை 6 மணிக்கு அரசு மருத்துவமனை தாராபுரத்தில் சிகிச்சைக்கு சேர்ந்ததாக என்னுடைய விசாரணையில் தெரியவந்தது என்றால் சரிதான். அதே தேதியில் இரவு 9.10 மணிக்கு மேற்படி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற குறிபாணையை சிறப்பு சார்பு ஆய்வாளர் பெற்றுள்ளார் என்றால் சரிதான். இறந்து போனவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதற்கு இரண்டு மணி நேரத்திற்குள் குமரேசன், முருகேசன், 1–ம் எதிரி மோனேஷ், 1–ம் எதிரியின் தகப்பனார் துரையன் என்பவர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்துள்ளார்கள் என்றால் சரிதான்.

**2.** அன்றைய தினம் 9.15 மணிக்கு 1–ம் எதிரி மேற்படி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்துள்ள விவரத்தின் குறிப்பாணையை தலைமை காவலர் ராமகிருஷ்ணன் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அன்றைய தினம் உதவி ஆய்வாளர் தான் அலங்கியம் காவல் நிலையத்திற்கு நிலைய பொறுப்பு அதிகாரி என்றால் சரிதான். அன்றைய தினம் அவர் பணியில் இருந்தாரா என்பது குறித்தும் அவருடன் எந்தெந்த காவலர்கள் பணியில் இருந்தார்கள் என்ற விபரம் என்னிடம் தற்போது உள்ளதா என்றால் இல்லை. அன்றைய தினம்மேற்படி குறிப்பாணையின் படி எதிரிகளிடம் எந்த காவலர்களும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் பதிவு செய்ததாக என்னுடைய ஆவணங்களில் இல்லை.

**3.** அன்றைய தினமே 1–ம் எதிரியிடமும் அவரது தந்தையிடமும் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் அது பின்னிட்டு மறைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 கொடுத்த புகார் அடிப்படையில் குற்ற எண் 604/2021, 1ம் எதிரி கொடுத்த புகார் அடிப்படையில் 605/2021, அ.சா.1ன் கணவர் கொடுத்த புகார் அடிப்படையில் 606/2021 என்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றால் சரிதான். மேற்படி 606/2021 வழக்கின் புகார்தாரர் அவரை விசாரிக்கச் சென்ற காவலரிடம் புகார் கொடுப்பது குறித்து யோசித்து சொல்வதாக குறிப்பிட்டார் என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. அ.சா.1 கொடுத்த புகாரில் எதிரியின் பெயர் மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் மற்ற விபரங்கள் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**4.** 604/2021 மற்றும் 605/2021 வழக்குகள் Case and counter இயல்பு கொண்டவை என்றால் சரிதான் ஆனால் சம்பவ நேரம் வேறு ஆகும். மேற்படி இரண்டு வழக்குகளையும் நான் ஒன்றாக விசாரித்திருக்க வேண்டும் என்று சொன்னால் சம்பவ நேரம் வேறு வேறாக இருந்ததால் நான் ஒன்றாக விசாரிக்கவில்லை. 1–ம் எதிரிக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து காயச் சான்றிதழ் அல்லது வேறு விவரங்களோ இந்த குற்ற அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. இறந்துபோனவர் மதுபோதையில் இருந்ததாகவும் விபத்தில் காயம் ஏற்பட்டதாகவும் அ.சா.ஆ.12 மற்றும் விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அ.சா.ஆ.5 அவரது மூச்சுக்காற்றில் சாராயநெடி இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**5.** அ.சா.ஆ.12ல் அவர் விபத்தில் காயமடைந்ததாக குறிப்பு உள்ளது. அ.சா.ஆ.6–ல் இறந்து போனவர் சாலை விபத்தில் இறந்ததாக குறிப்பு உள்ளது என்றால் சரிதான். இறந்து போனவரை முதலில் பரிசோதித்த மருத்துவர் அவருக்கு ஒரே ஒரு வீக்கக் காயம் இருந்ததாகத்தான் தன்னுடைய விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் சரிதான். கோயம்புத்தூர் மருத்துவமனையில் அவர் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட போது வீக்கக்

காயத்துடன் தையல் இடப்பட்ட ரத்தக்காயம் இருந்ததாக என்னுடைய விசாரணையில் குறிப்பிட்டாரா என்றால் இல்லை. சம்பவ இடத்தை முதலில் பார்வையிட்ட ஆய்வாளர் சம்பவ இடத்தில் ரத்தக்கரை படிந்து இருந்ததாக பார்வை மகஜரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான் நான் சென்று பார்த்த போதும் அங்கு ரத்தக்கரை இல்லை என்றால் இரண்டு நாட்கள் கழித்து சென்றதால் ரத்தக்கரை இல்லை. சா.பொ.1ல் ரத்தக்கரை படிந்து இருந்ததாக கைப்பற்றுதல் மகஜரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

**6.** சம்பவ இடத்திலிருந்து அரசு மருத்துவமனை கோயம்புத்தூரில் இறந்து போனவரை சேர்க்கும் வரையில் உடனிருந்த சாட்சிகளிடம் ரத்தம் படிந்த உடைகள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து காயம் பட்டவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்ற இருசக்கர வாகனத்தில் ரத்தக்கரை இருந்ததா என்பது குறித்து நான் விசாரித்தேனா என்றால் இல்லை. விபத்து பதிவேட்டு அறிக்கையில் ஆர்.டி.ஏ என குறிப்பிட்டுள்ள சூழ்நிலையில் அவரை சம்பவ இடத்திலிருந்து மருத்துவமனைக்கு கொண்டு சென்ற இருசக்கர வாகனத்தை நான் ஆய்வு செய்தேனா என்றால் மருத்துவர் ஆர்டிஏ என தவறுதலாக குறிப்பிட்டுள்ளார்.

**7.** மரணம் ஏற்படும் அளவுக்கான குற்றம் நிகழ்ந்துள்ள சூழ்நிலையில் இரு சக்கர வாகனத்திலோ அல்லது யாருடைய உடையிலாவது ரத்தம் படிந்ததா என்பதை குறித்து நான் விசாரித்தேனா என்றால் இல்லை. மருத்துவரிடம் அவர் முதலில் காயம் பட்டவரை பார்வையிட்டபோது வீக்கக்கயாம் மட்டும் இருந்ததாக குறிப்பிட்டுள்ள சூழ்நிலையில் சடலக்கூறாய்வு அறிக்கையில் அவரது நெற்றியில் ஆழமான குத்துக்காயம் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ள சூழலில் அது குறித்து குறிப்பாக விசாரித்தேனா என்றால் இல்லை. காயம்பட்ட நபரை கோவை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்ற ஆம்புலன்சில் ரத்தம் படிந்து இருந்ததா என்பது குறித்து விசாரித்தேனா என்றாலும் ஆம்புலன்ஸ் டிரைவர் விபத்து ஏதும் ஏற்பட்டதா என்று குறித்து விசாரித்தேனா என்றால் இல்லை. காயம்பட்டவருடன் ஆம்புலன்சில் உடன் யார் சென்றார் என்பது

குறித்து நான் விசாரித்தேனா என்றால் அது குறித்து தெரியவரவில்லை.

**8.** இறந்து போனவர் மற்றும் எதிரிடமிருந்து கைப்பற்றப்பட்ட துணியை நான் பகுப்பாய்வுக்கு அனுப்பவில்லை என்று சொன்னால் சரியல்ல அனுப்பியுள்ளேன். இறப்பை ஏற்படுத்தியதாக கூறப்படும் குத்துக்காயம் இறந்தவருக்கு எவ்வாறு ஏற்பட்டது என்பது குறித்து நான் சரிவர விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாராபுரம் அரசு மருத்துவமனையில் அனுப்பப்பட்ட போது இருந்த ஒரு காயம் கோவை அரசு மருத்துவமனைக்கு அவர் சேர்க்கப்பட்ட போது இரண்டு காயங்களாக எப்படி மாறியது என்பது குறித்து நான் சரிவர விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எதிரிகளை கைது செய்ததாக கூறுவது தவறு என்று சொன்னால் சரியல்ல.

**9.** அலங்கியம் காவல் நிலையத்திற்கும் எதிரிகளை கைது செய்ததாக கூறப்படும் இடத்திற்கும் சுமார் 10 கிலோ மீட்டர் தொலைவு இருக்கும். எதிரிகள் கைது செய்யப்பட்டதாக கூறப்படும் இடம் தளவாய்பட்டிணம் கிராமம் என்றால் சரிதான். அதற்கு அருகிலேயே ஊத்துப்பாளையம் கிராம நிர்வாக அலுவலரும், சித்தராவுத்தன்பாளையம் கிராம நிர்வாக அலுவலரும் இருக்கிறார்கள் என்றால் சரிதான். அருகிலேயே கிராம நிர்வாக அலுவலர்கள் இருந்த போதும் ஜன நடமாட்டம் அதிகமாக இருந்த சூழ்நிலையிலும் 10 கிலோமீட்டர் தொலைவில் இருந்து கிராம நிர்வாக அலுவலரை வர வழைக்க வேண்டிய அவசியம் என்னவென்றால் அந்த நேரத்தில் அவர்கள் தான் Available ஆக இருந்தார்கள்.

**10.** எதிரிகளை கைது செய்ததாக நான் கூறும் நேரத்திற்கும் அவர்களது ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்ததாக கூறப்படும் நேரத்திற்கும் மேற்படி சாட்சிகள் மேற்பட்ட இடத்திற்கு வந்திருக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் ரத்தக்கரை படிந்த சட்டையை கைப்பற்றியதாக கூறுவது தவறு என்று சொன்னால் சரியல்ல. நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியில்ல. இறந்து போனவருக்கு

ஏற்பட்ட காயங்கள் எதிரிகளால் ஏற்படுத்தப்பட்டவை அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:- இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.03.19 19:07:39 +0530

3-ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.